2012 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

69—

பத்திரிகையாளர் சங்கம்

***4903—திரு. ஆர். சுந்தர்ராஜன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டத் தலைநகரங்களில் பத்திரிகையாளர் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆறரைக் கோடி தமிழ் மக்களை அன்புடன் காக்கும் அன்னை வடிவம், ஒன்றரைக் கோடி தொண்டர்கள் தங்கள் உயிரினும் மேலாகக் கருதி பக்தி செலுத்தும் உத்தமத் தலைவி, சொல்லில் வாய்மையும், செயலில் நேர்மையும் கொண்ட அரசியல் ஞானி, ஞான முதிர்ச்சியுடன், தமிழ் ஞாலத்தை ஆளும் தெய்வப் பிறவி, அன்பு பொங்கும் இதயத்தால் அள்ளித் தரும் கொடை குணத்தால், தமிழக மக்களின் இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் தர்மத் தாய், எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சாது (மேசையைத் தட்டும் ஒலி) தொலைநோக்குப் பார்வையுடன் மக்கள் நலத் திட்டங்களைச் செயலாக்கும் ஆற்றல் வடிவம், ஏழேழு தலைமுறைக்கும் நான் வணங்கும் தெய்வம், தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதக் கமலங்களில் முதன்முதலில் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமுதாயத்தின் நான்காவது தூணாக இருந்து நாட்டுக்கு நல்லதைச் சொல்லும் பத்திரிகைகளை மதித்து, அடுக்கடுக்காகப் பல திட்டங்களை வழங்கி பத்திரிகையாளர் நலன் பேணுவதில்

வேறு எவரைக் காட்டிலும் முன் நிற்பவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே எனத் தெரிவித்து, பத்திரிகையாளர் தொடர்பான என் முதல் கேள்விக்கு இந்த அவையிலே முதன்முதலாக எனது பதிலைச் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் பத்திரிகையாளர்கள் சங்கம் அமைக்க விரும்புவோர்கள் அரசு விதிமுறைகளுக்குட்பட்டு அவர்களாகவே சங்கம் அமைத்துக்கொள்ளலாம். தமிழ்நாட்டில் பல பத்திரிகையாளர் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இத்தகைய சங்கங்கள் அமைப்பதிலும், அவற்றின் செயல்பாடுகளிலும் தமிழக அரசு தலையிடுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.

திரு. ஆர். சுந்தர்ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கும் அரசுக்கும் பாலமாக இருக்கின்ற பத்திரிகை நண்பர்களுக்கு ஓய்வூதியத்தை அதிகரிக்க வேண்டும்; அவர்களுக்கு சிறப்புக் காப்பீட்டுத் திட்டம், மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், பத்திரிகையாளர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும்; அகால மரணம் அடைந்தால் இப்போது கொடுக்கும் ரூ.2 இலட்சத்தை 5 இலட்சம் ரூபாயாக உயர்த்த வேண்டும்; மாவட்டங்கள்தோறும் பத்திரிகையாளர்களுக்கு மானிய விலையில் வீட்டுமனை இலவசமாக வழங்குவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 14–9–2011 முதல் ஐந்தாயிரம் ரூபாயாக இருந்த ஓய்வூதியத்தை ஆறாயிரமாக உயர்த்தி தந்துகொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் 14–9–2011 முதல் ரூ.2,500 என்று இருந்ததை, ரூ.3,000

என உயர்த்தித் தந்துகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெறுவதற்கான விதிகள் தளர்த்தப்பட்டு, ஆண்டு வருமானம் மற்றும் பணிக்கொடை அதிகபட்சத் தொகை இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும் என்று 2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) செய்தியாளர் அங்கீகார அட்டை 996 பேர்களுக்கும், செய்தியாளர் அட்டை 933 பேர்களுக்கும், இலவசப் பேருந்து பயண அட்டை 1965 பேர்களுக்கும் மற்றும் இரயிலில் பயணம் செய்கின்ற அங்கீகார அட்டை உள்ள செய்தியாளர்களுக்கு 50 சதவிகித கட்டணச் சலுகையும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் ஒரு குறிப்பிட்ட சதவிகித இட ஒதுக்கீடும் தமிழக அரசால் செய்யப்பட்டு வருகிறது.

அதுமட்டுமல்ல; ஜூலை 2011 ஆம் ஆண்டு தலைமைச் செயலகத்தில், பிரதான கட்டடத்தின் தரை தளத்தில் அமைந்துள்ள செய்தியாளர் அறை ரூ.20 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டு, 3–8–2011 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) முக்கியமான அரசு நிகழ்ச்சிகளின் ஒளிப்பதிவுகளை தலைமைச் செயலகத்திலிருந்து உடனுக்குடன் அனைத்துத் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் அனுப்பும் வசதியை ஏற்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் சுமார் ரூ.67.10 இலட்சம் ஒதுக்கப்பட்டு, பணிகள் நிறைவடையும் தருவாயில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பத்திரிகையாளர்கள் தலைமைச் செயலகத்திலிருந்து தங்கள் நிறுவனங்களுக்கு உடனுக்குடன் செய்திகளை அனுப்பும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ரூ.31 இலட்சம் மதிப்பீட்டில் ஊடக மையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 18–7–2011 அன்று சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் ரூ.39 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள சென்னை நிருபர் சங்கக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பத்திரிகையாளர்களுக்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஓய்வூதியம், குடும்ப நிதி,

குடும்ப ஓய்வூதியம், மருத்துவ உதவி, வீட்டு மனை வழங்கும் திட்டம், வீட்டு வாடகைக் குடியிருப்பு, இப்படி எண்ணற்ற நல்ல பணிகளைச் செய்து வருகிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

70—

திருக்கோயில் யானை

*****6325—திரு. வி. சோமசுந்தரம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு யானை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு நன்கொடையாளர்கள்மூலம் யானையினை உபயமாகப் பெற்று பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.*

திரு. வி. சோமசுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வாழ்ந்துவரும் ஏழை எளியோர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் வாரி வழங்கும் வள்ளல் குணம் கொண்ட எங்கள் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) மனிதர்களுக்கு*